விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 21 முறை 21 இதழ் 239

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7-10-1985


## அகதிகளுக்கு வீடு கொடுத்து உதவக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையிலிருந்து இனப்பிரச்சனைக்கான தமிழ் அகதிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளதால், அவர்கள் தங்கியிருப்பதற்கு வெறுமனே பூட்டிக் கிடக்கும் வீடுகளைத் தந்துதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் வந்துள்ள அகதிகளின் பிரச்சினை சம்பந்தமாக நேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

## மாதகல், காரைநகரில் மீண்டும் பீரங்கி முழக்கங்கள்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடல் பகுதியில் பீரங்கிக் குண்டுச் சத்தங்கள் நேற்று முன்தினம் இரவு முழுவதும் கேட்டவண்ணமிருந்தன.

நீண்டநாட்களுக்கு பின்னர் இடம்பெற்ற இந்தப் பீரங்கி வெடிச் சத்தங்களினால் கரையோரப் பகுதி மக்கள் மிகுந்த பதற்றமடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

இதேமாதிரி காரைநகரிலும்

(8-ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் ஆயுதப்படை ரோந்து யுத்தநிறுத்தம் ஒத்திவைப்பு?

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கில் ஆயுதப்படையினர் ரோந்துச் சேவையில் ஈடுபடவும், தேடுதல் நடத்துவதற்கும் மீண்டும் அனுமதிக்கப்பட்டுள்ளனரா?**

கடந்த சில தினங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கை மேற்படி தகவலை ஊர்ஜிதப்படுத்துவதாக உள்ளது.

ஒட்டுசுட்டான் இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள வீதியில் ஆயுதப்படையினரால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டுவருவதால் இப்பகுதி மக்கள் பதற்றமடைந்து வேறிடங்களுக்குப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

சோதனை நடத்தும் ஆயுதப் படையினர் முகாமுக்குப் பின்னால் உள்ள வயல்வெளிப் பக்கமாக வந்து சோதனையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவு, நயினாதீவிலிருந்து குறிகட்டுவான் செல்லும் மோட்டார்ப் படகுகள் யாவும் தற்போதும் ஆயுதப் படையினரின் சோதனைக்குப் பின்னரே குறிகட்டுவான் செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

கடற்படையினருடன் அதிரடிப் படையினரும் கூட்டாகச் சோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினமிரவு ஊர்காவற்றுறைப்பகுதியில் கடற்படையினர் சோதனைகளை மேற்கொண்டனர். மூன்று மணி நேரம் வரை இச் சோதனை நீடித்தது. சுமார் 100 கடற்படை வீரர்கள் இச் சோதனையை நடத்தினர்.

இவர்கள் ஆறு இயந்திரப் படகுகளில் காரைநகர் கடற்படைதளத்திலிருந்து ஊர்காவற்றுறைத்துறைமுகம் வந்திருந்தனர். இச் சோதனை நடவடிக்கையினால் ஊர்காவற்றுறைப்பகுதி பதற்றத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்தடியிலும் நேற்று அதி

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் மீண்டும் குண்டுச் சத்தங்கள்!

### கட்டடங்கள் தகர்க்கப்படுகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள கடைக் கட்டிடங்களைத் தகர்க்கும் வேலையில் ஆயுதப்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ள அதே வேளை, பொதுமக்கள் பெருவாரியாக நகரத்தை விட்டு வெளியேறி தூர இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சந்தைப்பகுதியில் உள்ள பெரும்பாலான கடைகள் குண்டு வைத்துத் தகர்க்கப்படுவதாகவும் மாடிக்கட்டடங்கள் உட்பட சுமார் நூறு கடைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமையும், நேற்று ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சி நகரம் ஒரே குண்டுச் சத்தங்களால் அல்லோலகல்லோலப்பட்டது. பாதிக்கப்பட்ட வர்த்தகர்களும் பொதுமக்களும் கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி நகரம் தொடர்ந்தும் பதட்ட நிலையிலே உள்ளது. மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர். பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டே காணப்படுகின்றன.

## பஸ் நிலையத்தில் தேடுதல் நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை ஆயுதப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

பஸ்நிலையத்தில் நின்ற சுமார் 35 பேர் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டுப் பின்னர் வீடுசெல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அப்பகுதியில் வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும், சோதிகள் யாவும் வேறு பாதையில் திருப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (க)

## இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலைச் சேர்ந்த விஜயகுமார் (27 வயது) என்ற இளைஞர் நச்சுத்திராவகத்திற்கு பலியானார்.

ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார். (க)

## பேராதனை பல்கலைக்கழக புதிய மாணவர் பயணம் குறித்து ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட பொறியியல், பல் மருத்துவம், மிருக வைத்தியம், விஞ்ஞானபீடம் ஆகிய துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் வரும் 9ம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கான பிரயாண ஒழுங்குகள்பற்றி ஆலோசிப்பதற்காகவே மேற்படி திகதியில் இவர்களைக் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பார்சல் குண்டு வெடித்ததா?

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் குண்டு வெடிப்பினால் காயமடைந்த ஆனந்தராஜா (25 வயது) என்பவர் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாபநபர் வீதியில் கிடந்த பார்சல் ஒன்றை கையிலெடுத்தபொழுது அதற்குள் இருந்த குண்டு வெடித்தமையால் படுகாயங்களுக்குள்ளானார்.

## ஐந்து நபர்களுக்கு இப்படி ஒரு தண்டனை

(சுன்னாகம்)

இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஐந்து நபர்கள் ஐந்து மணித்தியாலங்கள் மின்கம்பத்தில் பகிரங்கமாக கட்டிவைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுப்பகல் தெல்லிப்பளைச் சந்தியில் இப்பகிரங்க தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் மின்சார நிலையத்துக்குள் குறிப்பிட்ட 5 நபர்கள் தாங்கள் ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லி அங்கிருந்த காவலாளியைப் பயமுறுத்தி கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், பின்னர் குறிப்பிட்ட ஒரு இயக்கத்தினர் 5 நபர்களையும் பிடித்து விசாரணை நடாத்திய பின்னர் தெல்லிப்பளைச் சந்தியில் உள்ள கம்பங்களில் நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் 3 மணிவரை கட்டிவைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## 12 பேர் பலி

(மட்டக்களப்பு)

மொறக்கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற கமாண்டோப் பொலிஸ் ஜீப் கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 12பேர் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரணமானவர்களுள் 5 இளைஞர்களின் சடலங்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுப்பின்னர் எரிக்கப்பட்டதும் இறந்தவர்கள் நேற்று முன்தினம் காலை தங்கள் வேலைத்தலங்களுக்குச் சென்றபோதே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதாகக் கூறப்படுகிறது.

மரணமான மற்றைய 7 பேரும் வயோதிபர்களென்றும் அப்பகுதியால் வந்துகொண்டிருந்த லொறியிலிருந்த இறக்கிப் போட்டு இறந்த 7 பேரின்சடலங்களும் எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அந்த லொறி தெல்லிப்பளையைச் சேர்ந்தவருக்குச் சொந்தமானதாம்.

நேற்றுமுன்தினமும் நேற்றுக் காலையும் பலவீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## முன்னாள் எம். பி. சகோதரர் விடுதலை

(கொழும்பு)

திருக்கோணமலை பெரியகடையில், முன்னாள் மூதூர் எம் பி தங்கத்துரையின் சகோதரர் திரு பாக்கியதுரை ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று விடுவிக்கப் பட்டார். இவருடன் மற்றும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ய)

## ரொமேஷ் - கூட்டுமுன்னணி நீண்டநேரம் ஆலோசனை

புதுடில்லி

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியின் தொடர்ச்சியாக ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் நேற்றுப் புதுடில்லியில் பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்து நீண்டநேரம் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இந்த முன்னணியைச் சேர்ந்த 12 பேர் அடங்கிய குழுவொன்று நேற்று முன்தினம் இரவு புதுடில்லி வந்து சேர்ந்தது.

இலங்கையில் போர் நிறுத்தம் முழுமையாகக் கடைப்பிடிக்கவேண்டிய வழிவகைகளை இவர்கள் ஆராய்வார்கள்.

இந்தப் பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் கலந்துகொள்வதற்காக நேற்று மாலை புதுடில்லி வந்து சேர்ந்தனர்.

இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பொதுத்திட்டத்தினை உருவாக்குவதற்காக வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் ஒரு மாநில ஏற்பாடாகத் தமிழ் ஈழ போராளிகளின் குழுக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், தமிழ்ப் பகுதிகளை ஒரே மாகாணமாக்கும் திட்டத்தினை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார் என்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ். தொண்டமான் சென்னையில் நேற்றுத் தெரிவித்தார்.

# விளம்பரம்

## தேவை

எங்கள் ஹோட்டலுக்கு பில் கிளாக் இருவர் தேவை 30 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும், யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும் இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் ஹோட்டல் றெலெக்ஸ், 340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1093

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் நான்கு அல்லது ஐந்து அறைகளுக்குமேல் இருக்கக்கூடிய நல்லசூழலில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய [தொலைபேசி இருந்தால் நல்லது] வீடு ஒன்று உடன் வாடகைக்கு தேவை. மேல்மாடி மட்டும்என்றுல் விரும்பப்பட மாட்டாது. யாழ் நகருக்கு மிக அண்மையில் இருப்பது நன்று தொடர்புகளுக்கு:- ARES TEXTILES, 146, Modern Market, Central Road, Jaffna T. Phone: 24001. (1101)

தனியார் ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றி அனுபவமுள்ள 25 வயது இளைஞர் ஒருவருக்கு மனேஜர் அல்லது காசாளர் அல்லது எழுதுவினைஞர் வேலை தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 1094 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 1094

யாழ் பஸ் நிலையத்திலிருந்து ஒரு மைல் சுற்றுவட்டவில் தொழில் ஸ்தாபனம் நடாத்தவும், வசிக்கவும் பிரசித்த பாதை முகப்புடன் வசதிகள் அமைந்த வீடு தேவை. விவ இல: 1111, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1111

## கல்வி

யாழ்: மாவட்டத்தில்தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 6 (ஆண்டு 7) இல் அனுமதி பெற விண்ணப்ப முடிவு 10-10-85. பரீட்சை 23-11-85. 10 கடந்தகால வினாத் தாள்களும், 30 தமிழ்க் கட்டுரைகளும்கொண்ட பரீட்சைத்துணை நூல். ரூபா 12-50. கிடைக்குமிடங்கள்: ஸ்ரீலங்கா, பூபாலசிங்கம், ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலைகள். 1076

## விற்பனைக்கு

நீம் சுகாதாரதூபம்! இத் தூபத்தைத் தணலில் போட்டுப் புகைத்தால், துர்நாற்றம் வீட்டிலுள்ள நுளம்பு போன்ற விஷக்கிருமிகளை அழித்து வீட்டில் தெய்வீகத் தன்மையை மிளிரச் செய்யும். பைக்கற் ஒன்றின் விலை: 50 - சதம் மட்டுமே. மில்க்வைற் - யாழ்ப்பாணம். 1097

SALE

Imported Two Door Fridge, Akai Music Centre 3 in I, Both Excellant Condition, 281, Kandy Road, Jaffna. 1110

---

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காரைநகர் என்னுமிடத்தைச் சேர்ந்த விசுசித்தம்பி முருகேசு சண்முகம் பெண் பரமேஸ்வரி என்பவரின்மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் விசுசித்தம்பி முருகேசு சண்முகம் இல. 85 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. T/3855

மேலேயுள்ள இலக்கம் கொண்டவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொகுக்கப்பட்டுள்ளதெனவும் 1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ஆந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலே ஆக்கப்படும் முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13ந் திகதி,

கு. குலசிங்கம்
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது: நீதிமன்ற ஆணைப்படி.

த சங்கரப்பிள்ளை
மனுதாரின் சட்டத்தரணி: 1083

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் காலஞ்சென்ற செல்லத்துரை செல்வரத்தினம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் விடயமாக மானிப்பாயில் தற்பொழுது ஐக்கிய ராச்சியத்தில் குடியிருக்கும் செல்லத்துரை செல்வரத்தினம் கைம்பெண் நாகம்மா - இவர்தனது அற்றோணித் தத்துவகாரனுகிய மானிப்பாய் லோட்டன்வீதி ''தர்மவாசா'' என்ற முகவரியில் இருக்கும் நாகலிங்கம் சவுந்தரநாயகம்மூலம் வெளிபடுகின்றார்.

மனுதார்

மரணச் சொத்துரிமை நியாயாதிக்கம் } 3889/த

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனமில்லாததத்துவ வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள்மற்றும்சொத்துக்கள்ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள எவரேனும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 25ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப்படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 17ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
பதிவாளர்
கு. குலசிங்கம்

வரைந்தவர்
சி. இராசேந்திரன்
மனுதாரின் சட்டத்தரணி
23-8-1985

காரணம் காட்டும் திகதி 1985-10-11ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்
பதிவாளர்
1088

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் மானிப்பாய் றேட்டு 149-ம் இலக்கத்தில் வசித்து மரணசாதனமின்றி இறந்தபோன மீரா முகைதீன் மரைக்கார்தம்பி என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்

— மரணமெய்தியவர்

மீரா முகைதீன் மரைக்கார் தம்பி கைம்பெண் செய்நம்பு இல 149, மானிப்பாய் றேட், யாழ்ப்பாணம்.

— மனுதார்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல 3914

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்

1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6-ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்.

தயாரித்தது
மனுதாரின் சட்டத்தரணி
851

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

இணுவில், மாரிசன்கூடல் கல்லறைவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற சிகில் துரைசிங்கத்தின் மரணசாதனம் எழுதப்படாத மரணச்சொத்துக்களுக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படும் விடயமாக.

காலஞ்சென்றவர் சிகில் துரைசிங்கம் கைம்பெண் தேவகுஞ்சரி, 5 ஏ, மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழ: இல: தத்துவம் / 3910

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம இல்லாத மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கு இணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25ந் திகதி காலை 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளை யாக்கப்படலாகாதுஎன்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 9ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைந்தது:
ச. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி.
(954)

---

### உரும்பராய் இந்துக்கல்லூரி பழையமாணவர்

உரும்பராய் இந்துக்கல்லூரி பவளவிழா தொடர்பாக கல்லூரிப் பழையமாணவர் பட்டியல் ஒன்றைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளோம். பழையமாணவர்கள் தங்கள் பெயர், கல்லூரியை விட்டு விலகிய வருடம், நிரந்தர முகவரி, உத்தியோக முகவரி என்பவற்றை கூடிய சீக்கிரம் செ. சிவபாலன், அதிபர், இந்துக்கல்லூரி, உரும்பராய் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

1096 அதிபர்.

### வீடியோ பிரசாத் ஸ்தாபனம்

## மீண்டும்

7-10-85 திங்கட்கிழமையிலிருந்து திறக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களிற்கு அன்புடன் அறியத்தருகிறோம்.

வீடியோ பிரசாத்,
49, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

### தையிட்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தினூடாகக் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை 3ம் கட்டத்தில் வேலைசெய்த சகலரையும் அதிகரித்த கொடுப்பனவு விடயமாக எதிர்வரும் 9-10-1985 புதன்கிழமை எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

மூர்த்தி வீதி,
தையிட்டி கிழக்கு,
காங்கேசன்துறை,
7-10-1985.

K. சிவசிங்காரம்

1102

## அறிவித்தல்

மன்னார் மாவட்ட மக்களின் தாழ்மையான வேண்டுகோளுக்கிணங்க அவர்களின் நீண்டநாள் தேவைகளின் மிகமுக்கியமான குடிநீர் விநியோகத் திட்டத்தைப் பூர்த்திசெய்யும் ஒரே ஒரு நோக்கத்துடன் நாங்கள் எங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை 7-ம் திகதி முதல் கைவிடத் தீர்மானித்துள்ளோம்.

மன்னார் மக்கள் உறுதி செய்ததுபோல் மீண்டும் எங்கள் வாகனங்களை மீட்டுத்தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஊழியர்,
Samuel Sons and Co . Ltd,
Mannar.

7-10-85
1104

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்வி கௌசல்யா குழந்தைவடிவேல்



மலர்வு:
1970-07-20

உதிர்வு:
1984-09-18

திதி:
1985-10-07

ஓராண்டு காலம் ஓடிமறைந்துவிட்டதம்மா ஆனால் உன் திருவுருவம் எம் இதயத்தில் என்றென்றும் கொலுவிருக்கும் தாயே! இறைவியுடன் இணைந்து விட்ட எம் இனியவளே எம் இன்னல்களை நீக்கி எம்மைஇரட்சிக்க வேண்டுகின்றோம்!

உன் பிரிவால் வாடும்
இரா. குழந்தைவடிவேல் குடும்பமும்,
மற்றும் உன் சுற்றத்தவர்கள் யாவரும்.

குச்சம் வீதி, வல்வெட்டித்துறை.
1985-10-04. (1078)

● பிணையாட்களை விடுவிப்பதானால்—

# சோவியத் தமது செல்வாக்கை பயன்படுத்த வேண்டும்!

## கடத்தல்காரர்கள் நிபந்தனை

பெய்ரூட் அக். 6

லெபனானில் கடந்த திங்கட்கிழமை முஸ்லிம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட சோவியத் அதிகாரிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இது குறித்து பெய்ரூட்டிலுள்ள சோவியத் தூதரக பொறுப்பதிகாரி லெபனான் அமைச்சர்கள் சியாக்தலைவர் நபீப்பெரி, ருஸ்தலைவர் வலி ஜம்லட் ஆகியோருடன் தொடர்ந்து பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகின்றார்.

இதேவேளை சோவியத் அதிகாரிகள் கடத்தலுக்கு உரிமை கோரியுள்ள இஸ்லாமிய விடுதலை ஸ்தாபனம் திரிபோலியில் சிரியாவுக்கு ஆதரவான படைகள் முஸ்லிம் பழமைவாதிகளை தாக்குவதை நிறுத்துவதற்கு சோவியத் யூனியன் தமது செல்வாக்கைப் பயன்படுத்துவதோனால் தம்மால் கடத்தப்பட்டுள்ள பிணையாட்களை விடுதலை செய்வதாக அறிவித்துள்ளது. (ரா

## சதாரின் பூதவுடல் நல்லடக்கம்

டாக்கா அக்.6

நேற்று முன்தினம் மாரடைப்பால் காலமான பங்களாதேஷின் முன்னாள் அதிபர் ஐஸ்டிஸ் அப்துல் சதாரின் பூதவுடல் முழு ராணுவ மரியாதைகளுடன் டாக்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

1981-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பங்களாதேஷின் தேசிய வாதக்கட்சி வேட்பாளராக போட்டியிட்டு அந்நாட்டு அதிபராக அவர் தெரிவு செய்யப்பட்டார். 1982-ம் ஆண்டு ராணுவ ஆட்சியை கைப்பற்றும்வரை அவர் பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ரா)

## மீட்புப் பணிக்காக 50 கோடி

புதுடில்லி அக்-6

உத்தரப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள அழிவின் மீட்பு வேலைகளுக்காக மத்திய அரசு ஐம்பது கோடி ரூபா வழங்கியுள்ளது.

ஏற்கனவே மத்திய அரசால் நாற்பத்தாறு கோடி ரூபாய் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரா)

உலகச் செய்திகள்

## பாப்பரசர் இந்தியா விஜயம்

புதுடில்லி, அக் 6

பாப்பரசர் இந்தியாவுக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் விஜயம் செய்யவுள்ளார். (ரா)

# விமானத் தாக்குதலை எதிர்த்து கெய்ரோவில் ஆர்ப்பாட்டம்!

கெய்ரோ அக் 6

எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் நேற்று முன்தினம் பெருமளவில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

"டூனிஸில்" லுள்ள பி. எல். ஓ. தலைமை அலுவலகத்தின் மீது இஸ்ரேல் நடத்திய பயங்கர விமானத் தாக்குதலை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆர்ப்பாட்டங்களின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் "இஸ்ரேலுடனான ஆறு ஆண்டுகால உடன்படிக்கையை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையை வலியுறுத்தினர். இந்த ஆர்ப்பாட்டங்களின் போது அமெரிக்கா இஸ்ரேலுக்கு பாதுகாப்பு அளிப்பதைக் கண்டனம் செய்யும் அட்டைகளை மக்கள் தாங்கிச் சென்றனர். (ரா)

## இந்தியாவுக்கு இரண்டாமிடம்

புதுடில்லி அக் 6

இங்கிலாந்தின் கிளாஸ்கோவில் நடந்த வெள்ளிக்கிழமை முடிவடைந்த காமன்வெல்த் மல்யுத்த சாம்பியன் பட்டப் போட்டியில் இந்தியா இரண்டு தங்கப்பதக்கங்கள் உட்பட எட்டு பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பதினொரு நாடுகள் பங்கு பற்றிய இந்த சாம்பியன் போட்டியில் கனடா முதலாவது இடத்தையும், பிரிட்டன் மூன்றும் இடத்தையும் பெற்றன. (ரா)

## கொடுமைகளைக் கண்டித்து பேரணி

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப் பட்டு வரும் கொடுமைகளுக்கு கண்டனம் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ், தமிழ்நாடு பார்வர்ட் பிளக் ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய "தமிழீழ ஆதரவாளர் அமைப்பு" (ரெசோ) நேற்று முன்தினம் இங்கு பேரணி ஒன்றை நடத்தியது.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு மு கருணாநிதி, திராவிடர் கழகத் தலைவர் திரு கி. வீரமணி, தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு ப நெடுமாறன் ஆகியோர் சிறப்பு மேடையில் இருந்து இந்தப் பேரணியைப் பார்வையிட்டனர். (து)

**இன்று அமரர் எஸ்.எம். இராசமாணிக்கம் நினைவுதினம்**

# தூயசிந்தனையோடு அரசியல் அறம் வளர்த்தவர்

## பேராசிரியர் ப. சந்திரசேகரம்

இலங்கையில் வாழும் மக்கள் எல்லோரும் சரிநிகர் சமானமாக வாழ்ந்து இந்நாட்டில் பேசப்படும் இருமொழிகளான சிங்களமும், தமிழும் தேசிய மொழிகளாக, நிர்வாக மொழிகளாக, கல்வி மொழிகளாக விளங்கவேண்டும்; தமிழ் மொழி பேசும் மக்கள் தேசிய சிறுபான்மை இனத்தவராகக் கருதப்பட்டு, அவர்களது பாரம்பரிய நிலப்பரப்புவரையறுக்கப்படவேண்டும்; தமிழ் மக்கள் பிரதேசவேறுபாடின்றி இந்த ஒன்றுடைமை மக்களாக வாழவேண்டும்; மலையகத்தில் வாழும் தமிழர் இந்நாட்டு மக்கள் என உறுதிப்படுத்தப்படவேண்டும். வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிலம், நீர் ஆகிய மூலவளங்களும், மூலவளங்களும் செம்மையாகப் பயன்படுத்தப்படுவதன் மூலம், இம்மாகாணங்கள் பொருளாதார நிறைவுபெற்று இயங்கமுடியும். அரசினால் திட்டமிடப்பட்டு, சிற

(6ம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தைகள் தொடர்பாக

# தயக்கங்களும் நிலைப்பாடுகளும்

['இந்து' பத்திரிகையின் அரசியல்விமர்சகர் திரு. கே. ஜி. ரெட்டி அண்மையில் எழுதியுள்ள அர்த்தமுள்ள கட்டுரையின் மிகுதிப் பகுதியை இங்கு தருகின்றோம்]

தமிழில்: — பி எஸ் பி

திருமதி இந்திரா காந்தி பிரதம மந்திரியாக பதவியேற்றவுடன் அவரை உலக அரங்கில் உயர்த்திவிட ஆர்வங்கொண்டவர்கள் அவரை கிட்லரின் அமைதியைத் தோற்றுவிக்கும் விதத்தில் கெய்ரோ, பெல்கிரேட், மாஸ்கோ முதலிய நகரங்களுக்கு விஜயம் செய்யும்படியும் அதன்பின் லண்டன், பாரிஸ், வாஷிங்டன் முதலிய நகரங்களுக்குச் செல்லும்படியும் ஆலோசனை கூறிவந்தார்கள். ஆனால் மார்ஷல் டிட்டோ இந்த யோசனையைக் கைவிடும்படி திருமதி காந்தியிடம் கேட்டுக்கொண்டார்.

ஒரு புரட்சிகர இயக்கமானது ஒரு ஆயுதப் போராட்டத்தின் இடைநடுவில் அதனைக் கைவிட்டு பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்பமுடியாது. ஆயுதப்போராட்டத்தின் மூலம் ஏற்கனவே தான் சாதித்தவைகளை அவ்வாறான ஒரு பேரத்தின்போது இழக்க நேர்ந்துவிடுமென்று மார்ஷல் டிட்டோ திருமதி காந்திக்கு எடுத்துக் கூறினார். கிரேக்க கம்யூனிஸ்ட்கள் இவ்வாறான ஒரு வலைக்குள் எவ்வாறு விழுந்தார்கள் என்பதை அவர் எடுத்துக் காட்டினார். நியாயமான தீர்வு ஏற்படும் என்று கருதிய அவர்கள் உள்நாட்டு யுத்தத்தை இழந்தது மட்டுமன்றி நோக்கத்தையும் இழந்துவிட்டனர். நிர்வாகத்தைச் சீர்குலைத்திருந்த பரவலான போராட்ட நிகழ்ச்சிகளின் வேகத்தில் ஏற்பட்டிருந்த தளர்வைப் பயன்படுத்தி ராணுவம் அவர்களை அழித்துவிட்டதைப் பின்னர்தான் அவர்கள் உணரமுடிந்தது என டிட்டோ விளக்கினார்.

தமிழ் தீவிரவாதிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை வரவேற்பதோ அல்லது அவற்றைத் தடை செய்யும் அளவுக்கு தீவிர நடவடிக்கை எடுக்கும் வகையில் தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டத்தை எதிர்ப்பதோ இந்தியாவின் இப்போதைய கொள்கையாக இருக்கவில்லை.

தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை நிறைவேற்ற இலங்கை அரசு மறுக்கும்பட்சத்தில் ஆயுதப் போராட்டத்தில் மீண்டும் இறங்குவதற்கான தமது உரிமையை விட்டுக்கொடுக்காமலே, ஒரு நிரந்தர தீர்வினைக் காண்பதற்கான பேச்சுக்களில் தீவிரமாக ஈடுபடுவதின் நன்மையை தீவிரவாதிகளுக்கு உணர்த்துவதே இப்போது நடைபெற்றுவரும் நடவடிக்கைகளாகும், அதேசமயம் தீவிரவாதிகள் இப்போதைய சூழ்நிலையில் என்ன செய்வது என்றமுடிவுக்கு வரமுடியாமல் இருக்கும் அவர்களின் துணிச்சலான போக்கில் இந்திய அதிகாரிகள் பொறுமை இழந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் மறைக்கவில்லை.

இந்திய அரசாங்கம் எவ்வளவுதான் விருப்பமுடன் முயன்றாலும் இலங்கைப் பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வு ஏற்படப்போவதில்லையென்றும், இருசாராரும் தங்களுக்கிடையிலுள்ள அவநம்பிக்கைகளை கைவிட்டு நம்பிக்கை ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு செயலில் ஈடுபடும் வகையில் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்திச்செல்வதே இப்போது செய்யக்கூடிய ஒன்று என்றும் இந்திய அரசின் மேல்மட்டத்தில் இப்போது தீவிரமாக உணரப்பட்டு வருகின்றது.

போர் நிறுத்தம் என்பது பகை நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதுமட்டும் என்றாகாது. மீண்டும் தமது நடவடிக்கைகளை முன்னேற்றமான நிலையிலிருந்துகொண்டு ஆரம்பிக்கும் விதத்தில் தத்தமது நிலையை அதிகரித்துக்கொள்வதற்கு இந்த ஓய்வுக் காலத்தைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது என்பதும் அதில் அடங்கும் ஈழத் தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த [தமிழீழ வி. புலிகள், டெலோ, ஈரோஸ், ஈ பி ஆர் எல் எவ்] இயக்கங்கள் இலங்கை அரசு போர் நிறுத்தத்தை கௌரவிக்கும் வரை தாங்களும் அதனை மதித்து நடப்பதாக இந்திய அரசிடம் உறுதி கூறியிருக்கின்றன.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களின் குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதியில் அவர்களின் இன விகிதாசாரத்தை மாற்றும்வகையில் சிங்களவர்களை அதிகமாகக் குடியேற்றுவதற்கு இலங்கைஅரசு முயற்சி எடுப்பதற்கு முன்னர் நாட்டின் மக்கள் தொகையில் ஏறக்குறையமூன்றில் ஒரு பகுதியினர் தமிழர்களாய் இருந்துள்ளனர் என்று அண்மையில் டில்லியில் நடந்த பேச்சுக்களின் போது இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உதாரணமாக, கேந்திரத் துறைமுக நகரமான திருகோணமலையில் 1948ல் 7 606 ஆக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை 1981ல் 86,341 ஆக அதிகரித்துள்ளது. 921ல் 2.8 வீதமாக இருந்தது. 1971ல் 2 8 ஆக அதிகரித்துள்ளது. இதே காலத்தில் தமிழர்களின் எண்ணிக்கை 54ல் இருந்து 36 வீதமாகக் குறைந்துள்ளது. தமிழ் பேசும் முஸ்லிம்களின் எண்ணிக்கையும் 1921ல் 87 வீதமாக இருந்தது 1981ல் 29 வீதமாகக் குறைந்துவிட்டது.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இன விகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் நடவடிக்கையில் அங்கு பதவிக்குவந்த அரசாங்கங்கள் ஈடுபட்டுவந்துள்ளன என்ற விடயத்தில் டில்லியிலுள்ள கொள்கை அமைப்பாளர்கள் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. வடக்கு, கிழக்கை ஒன்றிணைப்பதோ, தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைகளை திரும்பவும் நிர்ணயிப்பதோ காலப்போக்கில் பிரிவினைக்கு வழி சமைத்துவிடும் என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டினை இந்திய அதிகாரிகளும் ஏற்றுக்கொண்டு செயற்படுவதானது இலங்கை அரசாங்கம் இன சமன்பாட்டை மாற்றி அமைப்பதற்காக தனது குடியேற்ற அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துவரும் திட்டமிட்ட நடவடிக்கைகளைப் புறக்கணிப்பதாகவுள்ளது.

பாரதூரமான உள்விளைவுக்கு இடமளிக்கக்கூடிய இம்மாதிரியான சிக்கல் மிக்க வெளிப் பிரச்சினைகள் சம்பந்தப்படும்

(6ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை;

—ஔவையார்

# நமது நோக்கு

## போர் நிறுத்தம் ஒரு புதுக்கலையா?

ஐரோப்பாவில் ஒரு காலம் பெரும் செல்வாக்குடைய நாடாகவிருந்தது ஸ்பெயின்.

ஸ்பெயினின் கடலோடும் மாலுமிகள் பரந்த உலகின் எல்லைகளைக் கண்டுபிடித்த வீரர்கள். அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் போன்ற பல மேதைகளை ஸ்பெயின் உரிமை கோருகின்றது.

இன்று வரைக்கும் ஒரு பாரம்பரிய அம்சமாக விளங்கும் காளை மாட்டுச்சண்டை உலகின் பிரபல்யம் பெற்ற பல ஆங்கில இலக்கிய நூலாசிரியர்களைக் கவர்ந்திருக்கிறது.

மனித உயிரை அடகு வைத்து நடைபெறும் இவ் விளையாட்டு அந்த சீசனில் பல்லாயிரக் கணக்கான பார்வையாளர்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கிறன.

இறந்த சண்டைக்காரர்கள் காளைகளினால் குத்திக் கொல்லப்படுகின்றனர். இருந்தும் சண்டையின் சுவை, இரத்தாறு பெருகும் விறுவிறுப்பு இளங்காளை-மாடென்ன மனிதனென்ன சாதிக்கும் ஆண்மையும் வீரமும் மக்கள் சமுத்திரத்துக்கு விருந்தாகின்றன.

புகழ்பெற்ற வீரர்கள் அண்மையில் அடுத்தடுத்து மரணமாகியபின் இந்தக் கொடூரமான விளையாட்டை ஒழிக்கவேண்டுமென்று பலர் முயற்சிசெய்தனர்; அதனைத் தடைசெய்வது ஸ்பானிய மொழியைத் தடைசெய்வதற்கு ஒக்குமெனப் பல பிறதேச ரசிகர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

விளையாட்டுத் துறையிலும் கொடூரம் இனிக்கின்றது. தெருவிற்சண்டையில் இரத்தப்பெருக்கு நிகழ்வதானால் அது கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டுமென்று கருதப்படுகிறது எவ்வித சண்டையும் ஒருவித கலையே; சண்டை நிறுத்தமும் ஒரு புதுக்கலையா?

இதனை இன்று நாம் காட்டுமிராண்டித்தனமென்று கொள்ளத்தணியாதிருப்பதற்கு இங்கு நிகழும் போரே காரணம்.

சண்டை முடிவடைவதற்கு விருப்பம் ஏற்பட்டபோதும் அதற்கு வழிகாணமுடியாது தடக்கிடும் நாட்டுக்கு உதவி அவசியம் தேவையென்பதை துணிவுடன் உரைக்கமுடியவில்லை;

சமாதான உடன்பாடு பற்றி தீர்க்கமாகப் பேசவேண்டியது உண்மையானால், போர் நிறுத்தம் ஏற்படுவதில் என்ன தயக்கம்?

இது ஒரு இலகுவான கேள்விபோல் தோன்றினாலும், இதில் ஒரு மயக்கம் உண்டு. இரு பக்கங்களும் போரை நிறுத்தும் நிலையில் உடன்பாடு எந்த அடிப்படையில் அமையும்? பேச்சு தோல்வியடைந்தால் பயங்கரவாதிகள் என்று இன்றும் குறிசுடப்படும் தமிழ் இளைஞர்கள் கதி என்ன?

வடக்கிலும் கிழக்கிலும் உண்டான அழிவுகள், அவற்றால் ஏற்பட்ட அகதி முகாம்கள், மக்கள் வெளியேற்றம் போன்ற பல பிரச்சினைகள், அரசாங்கத்துக்கு சார்பாகவும், போராளிகளுக்கு மாறாகவும் போவது நிசம்;

இவ்வித சந்தேகத்துக்கு இடமளிக்காது வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகப் பேசும் திறமை சமாதான மத்தியஸ்தம் வகிக்கும் இந்திய அரசுக்கு உரியது.

இலங்கை அரசு, தமிழ் மக்களைப்பற்றி அதிகம் அஞ்சாது. வாய்ப்பு உண்டாகும் போதெல்லாம் ராஜதந்திரம் என்ற ஏமாற்றுப் போக்கில் உருண்டிருக்கிறது.

தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரு பண்புடைய முதிய சமூகத்தின் தலைவர்கள் என்பதை மறந்து தம்முடைய கையாட்களைக் கொண்டு காரியம் பார்த்து வந்திருக்கிறது.

இந்த வஞ்சனை மிகுந்த விளையாட்டுக்கு முற்றுப் புள்ளி வைத்தவர்களே இன்றைய தமிழ் போராளிகள். எனவே நிலைமை மாற வேண்டுமென்ற நிர்ப்பந்தம் உண்டு. இருப்பினும் சிங்கள மக்களுக்குமுன் 'சண்டையில் வெற்றி' என்ற செய்தியை முன்வைக்கவேண்டியிருக்கிறது.

இந்தத் தர்மசங்கடத்துக்கு ஆட்சிபுரிந்த கட்சிகள் அனைத்தும் பொறுப்பு.

இன்று இதனைத் தீர்த்து வைக்க, ஒரு நட்பு நாட்டின் தலையீடு தேவை. இந்தியா இந்தப் பொறுப்பைத் தன் தலைமேல் சுமக்கவேண்டியிருக்கிறது.

ஆட்சிக்கெதிரான, சமரசம் விரும்பாத தடித்த அதிகார மிடுக்குப்பெற்ற அறிவு தகுதிகுறைந்த தலைவர்களுக்கெதிராக ஆயுதம் ஏந்துவதைவிட வேறு வழி இல்லை என்ற தீர்க்கதரிசனம் இன்றைய போர்நிறுத்த எதிர்வாதில் பிரதிபலிக்கப்படுகிறது. மனித இரத்தம் ஆறாய்ப் பாய்வது எங்கள் பண்பாட்டில் எவ்வித இன்பத்துக்கும் இடமளிக்காது;

நிரந்தரமான வழிகாண நீண்டகால அவகாசம் தேவை; படிப்படியாக நியாயம் உருவாகுமென்ற நம்பிக்கை முற்றாகச் செத்துவிடவில்லை;

எனவே பிரச்சினையை நன்கு அறிந்த இந்திய அரசு போராளிகள், தமிழ் மக்களின் இரட்சகர் என்ற நம்பிக்கைகொண்டால் போர் நிறுத்தம் அவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தக்க பாதுகாப்பு அளிக்கும்வகையில் செயற்பட தயங்காது உதவவேண்டும்.

## வளைகுடா யுத்தம்

உலக நாடுகளின் ஒன்றுபட்ட அமைப்பு ஐ.நா நல்ல விசாசம் இது. ஆனால் நாளுக்கு நாள் கவலெறிவேண்டுகின்றதே! எங்கும் ஏதேனுமொரு பெரும் ஆக்கிரமிப்பு நடந்துவிட்டால் 'ஐநா' என்று கத்துவது பயனற்ற பிரலாபம்.

ஈராக்-ஈரான் யுத்தம் ஐந்து வருடத்தை பூர்த்தி செய்துவிட்டது. அது ஏன் தொடர்கிறதென்பதை இதுகாறும் எவரும் அறிந்ததில்லை. இது ஒரு ஐந்தாண்டுத் திட்டமென்றாலும் போர் ஓயும் அறிகுறி ஏதுமில்லை. குத்துவிளக்கில் கணக்குப் பார்த்த ஈரான் இதுவரை 20 ஆயிரம் கோடி டாலர் நட்டமென்கிறது.

சமாதான முயற்சிகைகூடவில்லை. ஐ.நா பாவம் என்ன செய்யும். ஒரே மதத்தினர் ஆவே மேலிட்டால் மோதிக்கொண்டிருக்கின்றனர். சர்வதேச இஸ்லாமிய முன்னணி சும்மாவிருக்கவில்லை! ஆனால் சமாதான முயற்சியில் ஈடுபட்ட முன்னணியின் பெருந்தலைவர் யார் தெரியுமா? பாகிஸ்தானில் ராணுவ ஆட்சியை தொடர்ந்து நடத்தும் ஜனாதிபதி ஸியா உல் ஹக்.

இன்று பாகிஸ்தானில் நடைபெறும் இராணுவ ஆட்சி மக்களின் பொது எதிரியாகக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டில் சமாதானம் காண முடியாத இத்தலைவர் சர்வதேசப் பிரச்சினைகளில் வல்லமை பெற்றவரா? இலங்கையிலும் இவ்வித கருத்து இன்றுவரைக்கும் நம்பப்படுகிறது. எஸ். டபிள்யு ஆர். டி. தனிச் சிங்களத்தால் நாட்டைக் குழப்பிவிட்டு சர்வதேசப் பிரச்சினைத் தீர்க்க 'ஐநா' வுக்குச் சென்றார். அவரின் மனைவி முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ தமது நாட்டின் நிலைமை மோசமானபோதும் இந்தோ சீன யுத்தத்தில் சமாதானம் காணமுயன்றார். ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தானும் ஹோவலுவிலும், புதுடில்லியிலும் பெரும் பங்கு கொண்டு அரிய ஆலோசனைகள் வழங்கினார். எனவே கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடரி அருங்கதலித் தண்டுக்கு நாணுவது.. இயல்பு. இன்று உலக நிகழ்ச்சிகளில் கண்டனக் குரல் எழுப்புவதில் அமைச்சர் முஹம்மது மட்டுமல்ல ஏனைய தலைவர்களும் சாமர்த்தியம் பெற்றிருக்கின்றனர். கொழும்பு-யாழ்ப்பாணம் ரெயில் தடைப்பட்டிருப்பது அமைச்சரின் குற்றமா? எனவே அமைச்சர் உலகவிவகாரங்களில் தீவிர பங்கெடுப்பது தப்பென்று கூறமுடியாது.

### இஸ்ரேல் ஏற்படுத்திய சிக்கல்

1400 மைல்கள் கடந்து டுனிஸியாவிலுள்ள பாலஸ்தீன தலைமையகம் மீது சுமார் பத்து யுத்த விமானங்கள் கடும் தாக்குதல் நடத்தின. சுமார் 160 பாலஸ்தீன வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலை அணிசேரா நாடுகள் குறிப்பாக இந்தியாவும் இஸ்ரேலின் ஒரேயொரு நேசநாடாகிய எகிப்தும் கடுமையாக கண்டித்திருக்கின்றன. ஐ.நா வின் பாதுகாப்புச் சபை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது.

### றீகன்

ஜனாதிபதி றீகன் தனித்து நின்று இத்தாக்குதலை ஆதரிக்கிறார். "அடிக்குப் பதிலடி" என்பதே அவருடைய 'புதிய ஏற்பாடு' அந்தக் காலத்தில் இலங்கை வந்த அமெரிக்கன் மிஷனறிமார் பைபிளின் 'புதிய ஏற்பாட்டை'க் குறிப்பாக இலங்கையில் வாழ்ந்த அஞ்ஞானிகளுக்கு மிக அருமையாகப் போதித்து ஒரு

★ சர்வதேச அரங்கு — பார்...

## 'ஐநா...ஐநா' என்று ஆண்டாண்டு...

## அழுது என்ன பயன்?

### அதன் நாற்பதாண்டுக் கொண்டாட்டத்துக்கு ந...

சமாதான சமுதாயத்திற்கு வித்திட்டனர். 'தீமை செய்தவனுக்கு நன்மை செய்' என்பதே அக்காலப் 'புதிய ஏற்பாடு. இன்றைய அமெரிக்காவின் ஜனாதிபதி- பெரிய மிஷனறி- அதிவணக்கத்திற்குரிய றேவரெண்ட் றீகன் அதனை மாற்றியுள்ளார்; பழிக்குப்பழி வாங்கு, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பதே 'பதிலடி' என்பாத அவரின் 'புதிய ஏற்பாடு' பயங்கரவாதம் எங்கு நிகழ்ந்தாலும் அதனை அடித்து முறி என்றார் றீகன்.

### சிக்கல் நீக்கம்

றீகனின் இத் தீவிர போக்கு உலகனைத்தையும் கலமைப்படுத்துகிறது. ஆனால் றீகன் தனித்து நிற்கும் ஆற்றல் அற்றவரா? ஆனால் எங்கள் இலங்கைக்கு இது! இரு தலைக் கொள்ளி எறும்பு.

''இலங்கையின் பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தி உபாயங்களும் உலக நாடுகளுக்கு ஒருமிப்பு! அமெரிக்காவின் பொருளாதாரக் கொள்கைக்கு இலங்கையின்

கட்டுப்பா... பொருளா... பென்றும்... அமெரிக்... பின்பற்... அமெரிக்கா... அண்மையி... கருத்து... சீட... குறுப்பட்ட... இலங்கை... தில் எ... 'அமெரிக்... ஆகவே இ... லைப் பா...




சன்சில்க் ...

கைவீ...

வாழ்...

மகத்தான பரிசு
ரூ 100,000 பணப்பரிசு
... கைவீசிக் கடைவீதி செல்ல
வாழ்நாளில் ஓர் வாய்ப்பு

3 முதற் பரிசுகள்
ரூ 20,000 பணப்பரிசு

5 இரண்டாம் பரிசுகள்
ரூ 5,000 பணப்பரிசு

100 மூன்றும் பரிசுகள்
விசேஷ சன்சில்க் குளியல் துவாய்கள்.




JWT LB 1674

...ளர்

...தாறும்

...சவால்!

...சுதந்திரப்
...முன்னேடி
...இவ்விடயத்தில்
...இலங்கையைப்
...றும் பிரபல
...வாளர் ...
...கொழும்பில்
...ட்டிருக்கிருர்.
...நிலைமாறி
...பற்ற குட்டி
...ரேல்' விடயத்
...செய்வது?
...ழுமானது.
...ணக்கு ...
...இஸ்ரேல்

மொஸாட்டை' த்தது உக ...ப்போது பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களைப் பகைப்பதா? எனவே மந்திரி முஹம்மதைப் பின்பற்றி இலங்கை தனது கண்டனத்தைச் சமர்பித்தது. ஐநாவுக்கு செல்லவிருக்கும் பிரதமர் பிரேமதாசாவின் பாதை சுலபமாக்கப்பட்டுள்ளது இலங்கையின் துணிவு இருந்தவாறென்னே!

## காதலரின் ஊடல்

அமெரிக்கக் கையாட்களே பலர் இவ்வித 'மோதலுக்' குட்படுகின்றனர்; பிலிப்பைன்ஸ் ஜனாதிபதிக்கு பொதுத் தேர்தல் நடத்தும்படி அமெரிக்கா வற்புறுத்தியபோது 'அமெரிக்கத்தலையீடு' அனுமதிக்க முடியாதது என்ருர் ஜனாதிபதி மார்க்கோஸ்

தென்கொரியாவின் எதிர்க்கட்சியின் தலைவர் அமெரிக்காவிலிருந்து விமானநிலையத்தில் வந்து இறங்கியபோது அரசின் அதிகாரிகளால் தாக்கப்பட்டமைக்கு ... கண்டனம் தெரிவித்தது — தென்கொரியா அதனைப் பொருட்படுத்தவில்லை!

இன்று பாகிஸ்தான், பெனஸீர் பூட்டோவைத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதை அமெரிக்கா கண்டித்தது. அமெரிக்கத்தலையீடு உள்நாட்டு அலுவலில் விரும்பத்தகாததென்கிருர் ஜனாதிபதி ஸியா.

அதேபோல் இஸ்ரேல்— தமது கருவைப் பலதடவை கண்டித்திருக்கிறது !— இவை அனைத்தும் காதலர்களின் ஊடலே!

## பழைய பல்லவி

தென்ஆபிரிக்கா, இஸ்ரேல் இவ்விரு சர்வதேசக் குற்றவாளிகள் ஐநாவின் சாசனத்துக்கு மாறுபட்ட வகையில் சர்வமும் பிடிவாதமுமான கோரச்செயல்களில் தொடர்கின்றன என்று அணிசேரா நாடுகள் எவ்வளவு காலம் ஓலமிடுகின்றன. உடனடி பாகப் பாதுகாப்புச்சபை கூட்டவேண்டும் என்கின்றன உலக அரங்கில் எதிர்க்கின்ற ஆக்கிரமங்கள், ஆக்கிரமிப்புகள், யுத்தம் இன்றும் நடைபெறுகின்றன தங்கள் தங்கள் நாட்டில் அமைதியை ஏற்படுத்த வல்லமையில்லாத நாடுகளின் தலைவர்கள் ஐநாவில் ஒன்று திரண்டால் என்ன அற்புதம் நடைபெறும்!

## நியாயம் பிறக்குமா?

'ஐரோப்பிய பொருளாதாரம்' என்னும் கோட்பாட்டுக்குத் தம்மை அர்ப்பணித்துள்ள பலம் வாய்ந்த ஐரோப்பிய நாடுகள் எந்தக் கட்டத்திலும் அதற்குப் பங்கம் விளைக்கும் செயல்களில் தலையிடாவென்பது தெளிவு. அமெரிக்கா வுடனே அல்லது ரஷ்யாவுடனே சேர்வதும் அவைகளை பகைப்பதும் இந்தச் சமூகத்தின் நோக்கமல்ல.

இவ்வாறு வல்லரசுகள் பழைய ஏகாதிபத்தியப் போக்கை மாற்றியபோதும் இன்று வறுமையில் வாடும் மூன்றும் உலக நாடுகளுக்கு உதவியளிப்பாரவனா? யாதத்தம் ... என்றபொருளாதாரத்தறை களே இன்றைய அரசியலின் முதல் நோக்கம்; அதனைப்பாதுகாக்க யுத்த ஆயுத உற்பத்தியும் அணுவாயுதப் பரீட்சையும் இன்றியமையாதனவாகின்றன

எனவே கலகம் பிறந்தாலும் நியாயம் பிறக்க இடமில்லை!

## பாரில் பதற்றமே நிரந்தர நிலை!

எமது நாடு தொடக்கம் உலக நாடுகள் அனைத்திலுமே பதற்றம் உருகிகொண்டிருக்கிறது. பண்டைய போர்முறை போலல்லாது பல்லாயிரக்கணக்கில் மக்கள் குடிபெயர்வதும், நாடு கடந்து அகதிகளாகப் புகலிடம் பெறுவதும், அகதிமுகாம்கள் தாக்கப்படுவதும்-மத்திய கிழக்கில் மட்டுமல்ல, தென் அமெரிக்க நாடுகளின் இராணுவ ஆட்சியில், தென் ஆபிரிக்காவின் இனவெறி ஆட்சியில், பசுபிக்பிராந்தியத்தில்; பிரான்ஸ், அமெ... ரஷ்யா நடாத்தும் அணுவாயுதப் பரீட்சைப் போட்டி ...ளில் காணப்படுகின்றன.

## இந்தியப் பிரதமரின் கன்னிப்பேச்சு

நாற்பக்கங்களிலும் பெரும் வல்லரசுகளின் தூண்டுதல், பதற்றங்களை எதிர்நோக்கும் இந்தியாவுக்கு இவற்றினுல் நிலைகுலையாது, தேசப்பிரச்னைகளை 'உலகளாவிய பார்வை'யில் நோக்கும் ஆற்றல்! நேருவின் நன்கொடை; இந்திரா காந்தி நன்கு பயன்படுத்தி உலகின் பெருந்தலைவர் என்னும் மதிப்பைப் பெற்றபோதும் பல கண்டனங்களுக்கு இடமளித்தார்!

இன்று ஐநாவுக்குப் போகவிருக்கும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி, அந்தப் பாரம்பரைவனத்தில் ஒரு - பகம் புதுறையை அமைப்பாரா?


...கைச் சிங்காரப் போட்டியில் வென்ருல்...



...சிக் கடைவீதி செல்ல
...நாளில் ஓர் வாய்ப்பு!


...உங்கள் வாழ்நாளில் கைவீசிக் ...டி செல்லும் பாக்கியம் பெற ...? இதோ இந்த அற்புதமான ...ன்சில்க் போட்டி அந்தப் பாக்கியத் ...ழங்குகிறது! போட்டியில் பிரவே ...ன்வரும் விதிகளை கவனமாகப் ... கூப்பனை நிரப்பி அனுப்ப ...ய முகவரி, "சிகைச்சிங்காரம்" ...2121 கொழும்பு.


...ளை கவனமாகப் பார்த்து ஒவ்வொரு உருவத்துக் ...தமான சிகைச்சிங்காரத்தைத் தெரிவு செய்யுங் ...ர் சிகைச் சிங்கார இலக்கத்தை (1,2,3) அரு ...டத்துள் (A,B,C) பொருத்தமாக எழுதுங்கள்.

...விண்ணப்பங்களையும் ஒருவர் அனுப்பலாம். ...ந்தப்பட்ட கூப்பன்களை மேற்கண்ட முகவரிக்கு ...சில்க் வெற்றுப் பக்கட்களுடனே அல்லது ...ாத்தலின் மூடி ஒன்றுடனே இணைத்தனுப்புங்கள். ...டிவு திகதி 1985 நவம்பர் 29ம் திகதி.

...சிகைச் சிங்காரப் போட்டியில் லீவர் பிரதேர்ஸ் ...லிமிட்டெட், அதன் உப நிறுவன ஊழியர்களும் ...லங்கா (பிரைவேட்) லிமிடெட் ஊழியர்களும் ...நெருங்கிய குடும்பங்களும் தவிர்ந்த ஏனைய ...அனைவரும் பங்குபற்றலாம்.

...களின் தீர்ப்பே இறுதியானது, போட்டி சம்பந்த ...த தொடர்புகளும் கவனிக்கப்பட மாட்டாது.




முடிவு திகதி
நவம்பர் 29




விலை:
போத்தல் ரூ. 15.50
பக்கட் ரூ. 1.50

சேரல் – சிகைச் சிங்காரம், த.பெ. 2121
கொழும்பு.

| சிங்காரம் | | | |
|---|---|---|---|
| உருவம் | A | B | C |

பெயர் ______

முகவரி ______

அனுமதிப் பத்திர இல. S/471

சிகைச்சிங்காரங்களைப் பொருத்தி,
பரிசுகளை வெல்லுங்கள்

தூய, பளபளப்பான கேசத்திற்கு சன்சில்க் ஷம்பூ.

ஓர் தரமுயர்ந்த லீவர் உற்பத்தி.

## ஓராண்டாயினும் மறப்பதற்கில்லை



காரைநகர் இந்துக்கல்லூரியாக விளங்கி பின்னர் பெயர் மாற்றம் பெற்ற 'கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய வரலாற்றிலே இரு அதிபர்கள் பணியாற்றி அமரத்துவம் எய்தினர். ஏறத்தாழ ஐம்பதாண்டுகள் முன்னை பிரம்மஸ்ரீ. சீதாராமன் பீ. ஏ. அவர்கள் தமிழகத்திலுள்ள 'கொடுமுடி' என்னும் தலத்திலிருந்து வந்து, காரைநகர் மண்ணில் காட்டில் வசித்து அதிபராகப் பத்தாண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய வர். கல்லூரியை நிறுவிய பெரியார் சயம்பு உபாத்தியாயரைப்போலவே, மாணவர்களின் ஒழுக்க நெறி முறைகளுக்கும் உயர்கல்வி மேம்பாட்டிற்கும் உறுதுணையாகவிருந்து உதவியாசிரியர்களையும் நெறிப்படுத்திக் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை காட்டியவர் சீதாராமன் அவர்கள்.

இந்திய மரபு பிறழாத வட்டுக்கோட்டையில் புகழ் பூத்த அந்தணர் குடும்பத்தில் பிறந்து யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து விஞ்ஞானச் சிறப்புப்பட்டம் பெற்று, கொழும்பு றோயல் கல்லூரி அதிபராகவும், சுழிபுர விக்ரோறியாக் கல்லூரி உபஅதிபராகவும் பல்லாண்டுகள் பணியாற்றி இறுதியாக காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் முதற்றரக் கல்விச் சேவை அதிபராக ஓராண்டுக்கு மேலாகக் கடமையாற்றிய போது; கடந்த ஆண்டு கல்லூரிக்கு வருகை தரும் போது இதயக் கோளாறு ஏற்பட்டு கல்லூரியிலேயே அமரத்துவம் எய்திய ஏ. கே. சர்மா அவர்கள் சைவப்பண்பாடும், அந்தணருக்கமைந்த செந்தண்மையும் ஆளுமைத் திறனும், ஒருங்கே யமைந்தவர். கல்லூரியிலேயே ஏற்பட்ட அவரது திடீர் மறைவால் மாணவர்களும் ஆசிரியர்களும் அன்று கவலைக்கடலில் மூழ்கியவராய்க் கண்ணீர் மல்கிய காட்சி ஓராண்டு கடந்து விட்டபோதிலும் அனைவரது உள்ளங்களிலும் பசுமையாகப் பதிவுபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்மா அவர்கள் குறுகிய காலத்தில் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை காட்டி, ஆசிரியர்கள் அனைவரையும் அன்பால் பிணைந்து, கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு மட்டுமல்ல பாடசாலையை விட்டுவெளியேறிய மாணவர்களின் நலனையும் கருத்திற்கொண்டு தொழில் நுட்பப் பயிற்சிநெறி வகுப்பு ஆரம்பிப்பதற்கான முயற்சியையும் பாடசாலை அபிவிருத்திச்சபையின் ஆதரவோடு மேற்கொண்டார்கள். கல்வியுலகின் கலங்கரை விளக்காக விளங்கிய அமரர் ஏ. கே. சர்மா அவர்களின் கடமை நேரத் திடீர் மறைவு கல்லூரி வரலாற்றில் மறக்க முடியாதொன்று என்றால் மிகையாகாது?

—மு சபாரத்தினம்

## தூயசிந்தனையோடு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மை மக்கள் வாழும் பிரதேசங்கள், தாங்கள் வாழும் பிரதேசத்திலேயே சிறுபான்மை மக்களாக ஆக்கப்படுதல்கூடாது. இக்கருத்துக் கனைத்தான் அங்கத்துவம் வகித்த தமிழரசுக்கட்சியின் காருத்துக்களைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும், வெறுப்பு மனப்பான்மையின்றி, தூய சிந்தனையோடு இந்நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் முன்வைத்தவர், நீதி வழுவா நெறிமுறையில் நின்று அரசியல் அறம் வளர்த்த அமரர் கிண்ணப்பு இராசமாணிக்கம் அவர்கள்.

ஏறக்குறைய 25 வருடங்கள் அரசியல் வாழ்க்கையில் ஊறித் திளைத்த அமரர், தமிழன்னையின் பாரம்பரியத்தைப்பேணிக் காத்த மண்டூரம்பதியைச் சேர்ந்தவர். தனது முன் முதல் நிலைக்கல்வியை மண்டூர்க் கிராமத்தில் முடித்து, அதன் பின்னர் கல்முனை மெதடிஸ்த சங்கக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றார். பின்னர் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் நிலைக்கல்வி பெற்று, இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும், பின்னர் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் கற்று பொருளியல் துறைப் பட்டதாரியானார்.

இக்கால கட்டத்திற்தான், இந்நாட்டில் அரசியற் சூறாவளி கோரத்தாண்டவமாடிய காலம். நாட்டின் சேவையே உயர்சேவையெனக் கொண்ட அவர், அரசியலில் ஈடுபட்டு, பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தார். தனது தொகுதி பின்தங்கிய தொகுதி எனும் காரணத்தினால் ஆளும்கட்சியோடு சேர்ந்து தொகுதியின் மேம்பாட்டினுக்காக அயராதுஉழைத்தார்.

ஆனால் தொகுதி முன்னேற்றம் இவ் ஒதுக்கலுக்கு, அழிவுக்கு சமாளிக்காது என உணர்ந்த அவர், சிங்களம் மட்டுமே இந்நாட்டின் உத்தியோக மொழியாயிருக்கவேண்டும் எனும் ஆட்சியாளரின் கருத்தை வன்மையாகக் கண்டித்து, தந்தை செல்வநாயகத்தின் நேர்மையாலும், தீர்க்கதரிசனத்தாலும் உந்தப்பட்டு, வாழ்நாள் முழுவதும் தமிழினத்தின் முழுவடுதலைக்காக அயராது உழைப்பேன் என உறுதிமொழி எடுத்தார். அன்று தொடக்கம் இறுதி மூச்சுவரை தமிழினத்தின் சுபீட்சத்திற்காகவே வாழ்ந்தார்.

அண்ணல் இராசமாணிக்கம் அவர் சார்ந்த கட்சியினால் கட்சியின் தலைமைப்பீடம் பல தடவை அளிக்கப்பட்டு கௌரவம்படுத்தப்பட்டார் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் கிழக்கிலங்கை அரசியற் தலைவர்கள் கூடியகாலத்துக்குத் தலைமைத்துவம் வகித்ததன் மூலம் இக்கட்சி பிரதேச உணர்விற்கு அப்பாற்பட்டு, செயல்பட்டு வந்தது நிரூபிக்கப்பட்டது பிரதேச உணர்வினைக்கிளறிவிட்டு. குறுகிய கால அரசியல் வெற்றிபெற்ற பல அரசியல்வாதிகள் தற்காலிக வெற்றிபெற்றிருக்கலாம். இவரோ தனது தொகுதியில் கூட சமூகக்காரணிகளால், பல தடவை தோல்வி கண்டார் ஆனால் இலட்சியமே நித்தியம்என்றுகொண்ட இராசமாணிக்கரோ, பல அரசியல்வாதிகள் வட இலங்கையையும், கிழக்கிலங்கையும் ஒன்றிணைந்து வாழமுடியாது எனவும் அவர் மார்க்கம் தவறானதென எடுத்துக்கூற முயன்றும் ஒரு இனம் விடுதலை பெற வேண்டுமாயின் அந்த இன மக்கள் நாட்டில் சுயமரியாதையோடு வாழவேண்டுமானால் வேறுபாடுகளை நிவர்த்திசெய்து "அரசியல் எதிரிகளுக்குச்" சரண் புகாது தலை நிமிர்ந்து, கருத்தொருமித்து சிந்தனை ஒன்றுடையவராக வாழவேண்டுமென இடித்துரைப்பார்.

இராசமாணிக்கனார் தனது பாராளுமன்ற அங்கத்துவ காலத்தில் கனடாவுக்கும், ஜப்பானுக்கும் போகும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன கனடாவில் பொதுநல அமைப்புநாடுகளில் உரை நிகழ்த்திய அவர் கனடாவில் பிரெஞ்சு மக்கள் வாழ்கின்ற நிலையினையும், இலங்கையில் தமிழ்மக்கள் வாழும் நிலையினையும் ஒப்பிட்டு உரை நிகழ்த்தினார்.

அமைதியில் எழுந்த வீரமும், அறிவிலும், அனுபவத்திலும் எழுந்த அரசியல் அறக்கருத்துக்களும், தனது கிராமம், பிரதேசம் தமிழ்மக்கள் வாழுகின்ற பிரதேசங்களின் விடுதலை, நாட்டின் செழிப்பு சமயசமரசம். சமூகஒற்றுமை ஆகியன சங்கமித்த பக்திமார்க்கச் செயல்வீரரே, இராசமாணிக்கனார்.

முன்னாள் பாரதக் குடியரசுத் தலைவர், விவரித்தது போல, இவர் உண்மைத் தமிழனாய் வாழ்ந்த பெருமகன்

கிழக்கிலங்கை மக்கள் இவருக்கு அஞ்சலி செலுத்தும்முகமாக அவரது புகந்த இடமாகிய களுவாஞ்சிக்குடியில் எழுப்பியிருக்கும் சிலை என்றென்றும் இவரது சிந்தனைகளைப் பரப்பி நிற்கும்.

'மாய்தலெனும் பெருண்மை
பிறந்தவனு ழண்மை
வந்துநிருதோர் தொல்லு
லகில் வளர்தலெனு
முண்மை
தேய்தலெனு முண்மை
பிலை யாரு முவங்
கொள்ளச்
சென்றுதேய்ந் திறந்து
நித்த நின்று
வளர்கின்றேன்'

## வவனியா மாவட்டத்தில் 3720 தமிழ் அகதிகள்

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் 3720 தமிழ் அகதிகளும் 884 சிங்கள அகதிகளும் முகாம்களில் உள்ளனர்

தமிழ் பிரிவில் 16 அகதி முகாம் உண்டு: சிங்களப் பிரிவில் இரண்டு முகாம் உள்ளது என்று கச்சேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒமந்தை, அமுதாமில், பம்மைமடு, செக்கடிப்பிலவு, இரங்கராசவூர், வேப்பங்குளம், கோவில்புயங்குளம், புதுக்குளம், நொச்சிக்குளம் நெடுங்கேணி, புளியங்குளம், ஏலுமடு, மருதோடை, கரமோட்டை ஆகிய இடங்களில் தமிழ் அகதிகள் உள்ளனர்: இருமுகாம்கள் நெடுங்கேணி மருதோடையில் உள்ளது குறிப்பிடத்தக்கது:

சிங்கள அகதிகள் பன்சலவிகாரையிலும், கல்குண்டாமடுவ பாடசாலையிலும் உள்ளனர்.

சகல அகதிகளுக்கு சமூக சேவைப் பிரிவினரால் நிவாரண உணவுப் பொருள்கள் கிழமைக்கு ஒருதடவை வழங்கப்படுகின்றது. 50 ரூபா முதல் 115 ரூபா வரையிலான உணவுப்பொருள்கள் குடும்ப அங்கத்தவர்களுடைய எண்ணிக்கையினைப் பொறுத்து வழங்கப்படுகின்றது.

ஆனால் இவ்வுணவுப் பொருள்கள் அகதிகளுக்கு போதுமானதாக இருக்கவில்லை என்ற புகார் தெரிவிக்கப்பட்டது.

இந்நேரத்தில் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது:

பூவரசன்குளம், ஓமந்தை பாடசாலைகளில் தங்கியிருந்த அகதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

## பாராட்டு விழா

(கண்டுக்குளி)

"நவாலி மகாவித்தியாலயம் சில ஆண்டுகளுக்கு முன்னர் படிப்பு, விளையாட்டு ஆகிய துறைகளில் முதலிடத்தை வகித்து வந்தது. பின்பு பல சூழ்நிலைகளால் பாடசாலையின் தரம் குறைவடைந்து வந்தது. மீண்டும் இப்பாடசாலையை மேல் நிலைக்கு உயர்த்தவல்ல சிறந்த அதிபர் ஒருவரைத் தந்துள்ளோம். அவருக்குப் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்கினால் முன்பிருந்த நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை. நீங்கள் 13 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்றதில் எனக்கு எதுவித வியப்பும் இல்லை. சிறந்த உடற்பயிற்சி ஆசிரியையான திருமதி மகாலிங்கத்தின் சேவையைப் பாராட்டுவது பொருத்தமாகும்".

இவ்வாறு நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. எஸ் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தலைவர் தமது உரையில்; 'மாவட்டப்போட்டியில் முதலிடம் பெற்றமை தமக்கு உற்சாகத்தை அளிப்பதாகவும், இதே போன்று ஆசிரியர்கள் கல்வித்துறையிலும் மாணவர்களுக்கு முன்மாதிரியைக் காட்டவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

## தயக்கங்களும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போது அவைகளின் சரியான மாற்று நிலைகளை கருத்திற்கொள்ளவேண்டும்

தங்கள் பிரச்னைகளை தீர்த்துக்கொள்வதற்கு தீவிரவாதிகள் சமாதானப்பிலான விடயங்களை மிகைப்படுத்திக் கூறமுற்படுவது இயற்கை அதே வேளை தீவிரவாதிகள் இந்தியாவே முதல் நடவடிக்கை எடுக்கட்டும் என்று இருந்துவருகிறார்கள்.

ஆனால் விரைவான ஒரு தீர்வினைக் காண்பதற்கு இலங்கை அரசாங்கம் நல்ல சமாசிதனாக செயற்படும் இந்தியாவை ஏமாற்றிவிட முடியாது: சுருக்கிச் சொல்வதானால் இந்த அபாயகரமான சூழ்நிலைதான் இப்பொழுது திரு ராஜீவ் காந்தியுடைய அரசாங்க ஆலோசகர்களையும் எதிர்நோக்கியுள்ளது.

(முற்றும்)

## ஆலய நிர்வாகிகள்

(சண்டுக்குளி)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தருமகர்த்தா சபை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் தலைவராக எஸ். சிவகுருநாதனும், செயலாளராக டாக்டர் திரு எஸ். மூர்த்தியும், பொருளாளராக ம. சிரிசரனும் தெரிவு செய்யப்பட்டனர். 7 பேர் கொண்ட அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



(யாழ்ப்பாணம்)

தொண்டைமனாறு செருடாவிலைச் சேர்ந்தவரும் வல்வை சிதம்பராக் கல்லூரி சாரணத் துருப்பின் உதவ சாரண தலைவரும் ஆகிய திரு. முத்துராசா இரவீந்திரன் சாரணத் தலைவர்களுக்கான உயர் பயிற்சியில் சித்திபெற்று தருசின்னத்தினை பருத்தித்துறை மாவட்ட சாரண ஆணையாளர் திரு. கோ. செல்வநாயகம் அவர்களிடமிருந்து வருடாந்த பாசறையில் பெற்றுக் கொண்டார். பருத்தித்துறை மாவட்டத்திலிருந்து முதன்முதல் தருசின்னம் பெற்றுள்ளவர் இவராவார்.

## கைநூல்

(பண்டத்தரிப்பு)

தேசிய உர வாரத்தை முன்னிட்டு யாழ் திட்டமிடல் பணியகம் "பசளைகளும் அவற்றின் பயன்பாடும்" என்ற கைநூல் ஒன்றை இலவசமாக வெளியிட்டுள்ளது.

செயற்கை உரத்தைப் பயிர்வகைகளுக்கு எந்தச் சந்தர்ப்பத்தில், எவ்வளவு அளவு போடவேண்டும் போன்ற விபரங்களும், விவசாயிகளுக்குப் பயன்படும் பல கட்டுரைகளும் இக்க நூலில் இடம்பெற்றுள்ளன.

(1) குரக்கன் (2) சாமை (3) தினை (4) வரகு (5) அரிசிமா (6) குரக்கன்மா
(7) ஒடியல்மா (8) கறித்தூள் (9) புழுக்கொடியல் (10) ஒடியல்

முதலியவற்றை நியாய விலையில் கொள்வனவு செய்கின்றோம்.

தரமான (1) அவல் (2) கற்கண்டு (3) சர்க்கரை (4) கௌபி (5) பாசிப்பயறு (6) உழுந்து
விற்பனைக்கு உண்டு.

**யாழ். ஐக்கிய வியாபாரச்சங்க விற்பனை நிலையம்,**

**150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## மயிரிழையில தப்பினர்

[யாழ்ப்பாணம்]

மோட்டார் சைக்கிளை லொறி மோதியதில் மருத்துவப் பிரதிநிதியொருவர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் ஆனைக்கோட்டையில் நடந்தது.

அதிவேகமாக யாழ் நோக்கி சென்று கொண்டிருந்த லொறி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மருத்துவப்பிரதிநிதியை மோதிவிட்டு தலைமறைவாகி விட்டதாகவும் அவ்வூர் பொதுமக்கள் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி விபத்தில் மயிரிழையில் உயிர் தப்பியவர் கொக்குவில் மேற்கைச்சேர்ந்த கே. சுந்தரகுமார் என்பவராவார். (ச)


ராஜனி மினி
5 X 5 திரையரங்கில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Chained Heat
அமெரிக்க பெண்களின் சிறை வாழ்க்கையை சித்தரிக்கும் படம்.

உஷா மினி
10 30, 2-30, 4-45, 6-45
TORNADO
Last Hunter படத்தை விட சிறந்த விறுவிறுப்பான தாக்குதலைக் கொண்ட புதிய வெளியீடு

எம்பயர்
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-15, இரவு 9-00
தியாகராஜன் 3 வேடம் சரிதா நம்பியார், சத்யராஜ்
எரிமலை
சினிமாஸ்கோப் புதிய வெளியீடு

ஹோர்டி மினி
10-30, 2-30, 4-45, 7-00
FINAL MISSION
வயதுவந்தவர்கள் மட்டும்
விறுவிறுப்பான சண்டைகள் நிறைந்தது

மனோகரா
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
டார்லிங்
Darling
டார்லிங்
பாக்கியராஜ்-பூர்ணிமா-ஜெயராம்-கல்லாபெட்டி சிங்காரம்
(கலர்)

வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
பாக்கியராஜ் - சுமதி நடித்த
சுவரில்லாத சித்திரம்
(கலர்)

ஸ்ரீதேவி சினிமா
10-30, 2-30, 6-30
சிவகுமார்- ஜெயசித்திரா நடித்த
வெள்ளிக்கிழமை விரதம்
புத்தம் புதிய பிரதி


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

### ஆறுமுகம் செல்வரட்ணம்

(முன்னைய வெலிங்டன்படமாளிகை முகாமையாளர்)



மலர்வு:
05 – 03 – 1929

உதிர்வு:
29 – 09 – 1983

ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், மற்றும் உறவினர்கள்.

"மிருணாளி"
மஞ்சவனப்பதி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு. 1059

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு. துரையப்பா இராசரட்னம்

மலர்வு:
12-07-1919



உதிர்வு:
17-10-1984

அன்பினால் எம்மவரை ஆட்சி கொண்டாய், பண்பினால் பற்பலரை ஈர்த்தெடுத்தாய். பாசமதை எல்லோருக்கும் பகிர்ந்தளித்தாய் - எம்மைப் பரிதவிக்க விட்டு நீ மட்டும் சென்றது என்ன? நீ பிரிந்து சென்றிங்கே ஆண்டு ஒன்றானாலும் உன் நினைவு உள்ளத்தில் பல்லாண்டாய் உயிர்வாழும்.


இங்ஙனம்
அன்பு மனைவி, பிள்ளைகள்.

வளாக வீதி, திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (1112)

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி

### செல்வி ஞானப்பிரகாசம் தேவி

(காலஞ்சென்ற ஞானப்பிரகாசத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற தவராசா அவர்களின் அன்புத் தங்கையும்)



ஆண்டு பல போயும் ஆறுதல் எம்துயர் ஆறுதற்கெப்போது காலும் வரும். கண்கண்டவிடமெல்லாம் நின்னுருவம் காணுதபோதில் உன் நினைவும், மன்னவதனை நீ விட்டுச் சென்றதை மனமுவந்து தருவதற்கேது விடு. ஆகையினால் கண்ணீர் பூக்களை நிதம் காணிக்கை யாக்குகின்றோம்.

அம்மா, சின்னண்ணா, அக்காமார், தம்பி, மச்சான்மார், அத்தான்மார், மாமி, சித்தப்பா, மருமக்கள், பெருமக்கள் ஆகியோர்.

இப்படிக்கு
மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
குடும்பத்தினர்.

சுப்பர்மடம், பருத்தித்துறை. (1108)

## இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 21 (7 - 10 - 65)
கிழமை: திங்கள்
திதி: அட்டமி
நட்சத்திரம்; திருவாதிரை அற்று புனர்பூசம்

மேடம்: குடும்ப வாழ்க்கை இன்று சுமுகமாக இருக்கும். புண்ணிய செயல்களில் ஆர்வம் பிறக்கும். தொழில் சிறக்கும் மதிப்பும் உயரும்.

இடபம்: தப்பான பாதையில் இழுத்துச் செல்லப்படுவீர்கள் தொழில் துறையில் வீண் பிரச்சனைகள் உருவாகலாம். நிதானமாக நடந்து கொள்ளவும்.

மிதுனம்: இன்னலின் பின்னல் தாக்கும் குடும்ப மனஸ்தாபத்திற்கு இடமுண்டு. இடைக்கலப்பிரிவுக்கும் இடமேற்படும்.

கடகம்; காதல் விவகாரங்கள் தலைதூக்கலாம். மாணவர்களாயின் வளமான நாள். தொழில் துறையிலும் சமயோசிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவீர்கள்.

சிங்கம்:- ஏக்கத்தின் சாயல் தாக்கும். அரசியல்வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம். எவ்விடயத்தையும் நன்கு ஆலோசித்து செயல்படுத்தவும்.

கன்னி:- மாதரு வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. மனைச் சிறப்புமுண்டு. வின் பொருள் விருத்தியுடன்; விருந்திற்கும் இடமுண்டு.

துலாம்: புத்திரர் மகிழ்ச்சியுண்டு. வீட்டில் சுபகருமங்களும் இடம் பெறலாம். கைத்தொழில் புரிவோருக்கு இன்று நன்னாள்.

விருச்சிகம்: உளவு வேலை பார்பதற்கும் எதிரிகள் மூலைவர். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் சிறுவிபத்தும் ஏற்படலாம். அவதானம் வேண்டும்.

தனுசு: தரும சிந்தை மேலோங்கி நிற்கும். எதிலும் நன்மாற்றம் உருவாகலாம். குடும்ப மகிழ்ச்சியுமுண்டு.

மகரம்: வாய்வுக் கோளாறினால் இன்று வேதனைப்படுவீர்கள். சிறிய விடயம் கூட இன்று சிரமமாகத் தோன்றும் குடும்பத்திலும் மோதல்கள் ஏற்படும்.

கும்பம்:- பெரியார் ஆதரவு கிட்டும். நினைத்ததைச் சாதிப்பதில இன்று முன்னணியில் நிற்பீர்கள். ஆராய்ச்சியாளர்களுக்கும் ஆர்வம் பிறக்கும்.

மீனம்:- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கும் இன்று வழிகோலப்படலாம். திடீர் நன்மைகளுக்கு இடமுண்டு. குறிக்கோள் வெற்றிக்கு இடமுண்டு சுபதினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## பின்னுறுதிக் கட்டளை மற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற இரத்தினவேல் இராஜலிங்கத்தின் மரணசாதனமில்லா சொத்து விடயமாக:

இறந்தவர்
இராஜலிங்கம் கைம்பெண் சீதாதேவி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

மனுதாரர்.

இல: 236/ரி

எதிர்

பராய மற்றவர் } 1. கிசோகுமார் இராஜசிங்கம் - 15 வயது

2. கதிரவேல் அருணகிரிநாதன், நுணாவில் கிழக்கு சாவகச்சேரி. 2ம் பிரதிவாதி பராயமற்ற 1ம் பிரதிவாதியின் பாதுகாவலர்.

பிரதிவாதிகள்

மேற்குறிப்பிட்ட மரணச்சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்தவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேலும் பராயமற்ற 1ம் பிரதிவாதியின் நலத்தைப் பாதுகாக்கும் முகமாக ஏன் 2ம் பிரதிவாதியை பாதுகாவலராக நியமிக்கக்கூடாதென்பதற்கும் இவ்வழக்கில் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கும் அக்கறையுள்ள எவரும் தகுந்த காரணம் ஏதும் இருப்பின் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 9ந் திகதியன்று தெரிபட்டு அதற்கான காரணம் காட்டுமாறு இத்தால் கேட்கப்படுகின்றீர்.

1985-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி.

ஆ. குணநாயகம்
பதிவாளர்

வரைவு
வி. பொ. கார்த்திகேசு
மனுதாரரின் சட்டத்தரணி (1100)

## தீக்குளித்தவர் மரணமானர்

சென்னை அக்: 6

கடந்த மாதம் 24-ம் திகதி திருவொற்றியூரில் தீக்குளித்த தி. மு. க. தொண்டர், காயங்கள் காரணமாக நேற்று முன்தினம் சென்னையில் காலமானர். இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை ஆட்சேபித்து இவர் தீக்குளித்தது குறிப்பிடத்தக்கது. (ரா)


## எமது புதிய வெளியீடுகள்

1. ஜனனி
2. ராஜரிஷி
3. ஈட்டி
4. ஆகாயத் தாமரைகள்
5. ஆண்டவன் சொத்து
6. மகிஷாசபதம்

} CEMARA COPIES

பழைய படங்கள்:-

7. முகராசி
8. மர்மயோகி
9. பக்தாத் திருடன்
10. தென்னாலிராமன்
11. பூம்புகார்

} PYRAMID MASTER

குணம் வீடியோ சென்ரர்,
42 மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (1113)

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


## மறியல் போராட்டத்தின் விளைவு:
# மக்கள் வங்கி முகாமையாளர் குழு கொழும்பு விரைவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகள் அடகு வைத்தோர் சங்கத்தினர் தங்கள் நகைகளை மீளளிக்குமாறு கோரி தொடர்ந்து நடாத்தி வந்த மறியல் போராட்டத்தின் விளைவாக மக்கள் வங்கி முகாமையாளர்களைக்கொண்ட குழு ஒன்று நேற்று முன்தினம் காலை கொழும்புக்குச் சென்றுள்ளது.

இக்குழுவினர் அடகு நகைகளை அடகுவைத்தோர்களுக்கு மீளளிப்பது சம்பந்தமாக ஓர் உறுதியான முடிவை எடுக்கும் என்றும் வெகுவிரைவில் வடபகுதி அனைத்து மக்கள்வங்கிக் கிளைகளில் அடகுவைத்த நகைகளுக்குரிய பணம் செலுத்திய வர்களுக்கு நகைகள் மீளளிப்பு செய்யப்படும் என்றும் சங்கம் எதிர்பார்க்கிறது.

அடகுநகைகள் கொண்டு வரப்படும் மக்கள் வங்கிக்கிளைகள், விநியோகித்த திகதி ஆகியவற்றின் விபரங்கள் சங்கத்தினால் பின்னர் தெரிவிக்கப்படும் என்றும் அடகு நகைகள் யாழ்ப்பாணம் வந்து சேரும் வரையும் மக்கள் வங்கிக்கிளைகள் முன்னிலையில் மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது (மா)

## மன்னார்ல மின்சாரம் இல்லை

(கொழும்பு)

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் இருளில் மூழ்கியுள்ளது:

மின்சாரம் முற்றாக தடைப்பட்டுள்ளதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆஸ்பத்திரிக்கு மட்டும் சிறிதளவு மின்சாரம் கிடைக்கிறது (ய)

## கடமை லீவு

(கொழும்பு)

அநுராதபுரம், வெலகநறுவை ஆகிய பகுதிகளில் கடமையாற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கு கடமை லீவு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றிய சிங்கள ஆசிரியர்களுக்கும் இந்த கடமைலீவு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிப்புரையை கல்வி அமைச்சு வழங்கியுள்ளது:

## மாதகல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அதிகாலைவரை கடல் பகுதியிலிருந்து பீரங்கி முழக்கம் கேட்டதால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்து தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று மினிபஸ் சேவை தொடரும்

(யாழ்ப்பாணம்)

இணுவிலில் இடம்பெற்ற விபத்து மரணம் சம்பந்தமாக ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட யாழ் காங்கேசன்துறை மினிபஸ் சேவை, இணுவில் சமாதான சபையால் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் பேரில் இன்றிலிருந்து மீண்டும் நடைபெற சங்கம் முடிவு செய்துள்ளது.

யாழ். மாவட்ட தனியார் பேருந்து சங்கம் மினிபஸ்-கண்டக்டர் விபத்தில் மரணமானவருக்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்துள்ளது, (மா)

## அகதிகளுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகையாளர் மகாநாடொன்று நடாத்தப்பட்டது

யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகள் முகாமைபகளின் தலைமையகத்தில் செல்வி கே. மேகலா தலைமையில் இம்மகாநாடுநடைபெற்றது.

ஆஸ்பத்திரிகள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் கருதி அகதிகளாக வந்துள்ளவர்கள் இலவசமாகப் பிரயாணம் செய்வதற்கு மினிபஸ்கள், வ. பி. போ: சபை பஸ்கள் உதவவேண்டுமென்றும் அம்மகாநாட்டில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

(அ - மா)

## மீண்டும் ஆயுதப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலைமுதல் வாகனங்கள் மறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டன இராணுவவீரர்கள் இச்சோதனைகளை நடத்தினர். பண்ணைப்பால வீதியில் வாகனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு இச்சோதனை நடத்தப்பட்டது

பயணிகளின் அடையாள அட்டைகள் மட்டுமே பரிசோதிக்கப்பட்டன. அடையாள அட்டைகள் இல்லாதோர் விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை இலங்கையில் போர் நிறுத்தத்தை இலங்கை அரசு தற்காலிகமாக வாபஸ் பெற்றுள்ளதாக அகில இந்திய வானொலி இரு தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

இலங்கை பாதுகாப்பு மட்டாரங்களை ஆதாரங்காட்டியே இச்செய்தி அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது:


நெற்பயிரில் களைகளைக் கட்டுப்படுத்த

**36% 3.4. டீ.பீ.ஏ**

அடங்கிய

ரெட்ஸ்டார்




# "வீடெக்ஸ் 36"

தெளியுங்கள்

புல்லின களைகள் மொண்டி, கோழிச்சூடான் குதிரைவால்புல் போன்றவற்றையும், அகன்ற இலை களைகளையும், கோரை வகைகளையும் கட்டுப்படுத்தும்.

லீற்றர் 3 ரூ 380/-
லீற்றர் 2 ரூ 260/-
மி. லீ 450 ரூ 62/50

அங்லோ ஏஷியன் பேர்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றம் பேங்க் கட்டிடம் கொழும்பு 1.

TEAM


## மரண அறிவித்தல்

### திரு. தப்பு குலவீரசிங்கம்

இளைப்பாறிய R. V. D. B கணக்காளரும், தற்போது நல்லூர் பால்சபையில் கணக்காளராகவும் கடமையாற்றும் திரு. தம்பு குலவீரசிங்கம் அகால மரணமானார் இவர் கமலாவின் அன்புக்கணவரும் உதயசங்கர் (யாழ் மத்திய கல்லூரி, பிரபாகரி (யாழ் மத்திய கல்லூரி), சேரவது (யாழ். இந்து மகளிர் கல்லூரி). செ. ரி (யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;- டாக்டர் சபாரத்தினம்
308, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 1118

## மரண அறிவித்தல்

### விஸ்வநாதர் சரவணமுத்து

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த விஸ்வநாதர் சரவணமுத்து 6-10-85 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தத்தினதும் சிவமலர் ஆகியோரின் தந்தையும் செ. பொன்னையா, சு. புஷ்பநாச்சிப்பிள்ளை ஆகியோரின் மாமனும், பிரேமகுமார், ஆனந்தசெல்வம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கோப்பாய் தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 7-10-85 திங்கட்கிழமை 12 - மணியளவில் நடைபெற்று கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

போ. பிரேமகுமார்,
பேரன்

1114

## மரண அறிவித்தல்

அரியாலையூர்

### ஐ. எஸ். சண்முகநாதன்

ஆசிரியர்

(யாழ். நகரின் பிரபல விளையாட்டு வீரர், சிறந்த உடற்பயிற்சி ஆசிரியர், பிரபல நாடக மேதை)

ஐ. எஸ். சண்முகநாதன் இளைப்பாறிய உடற்பயிற்சி ஆசிரியர் காலமாகிவிட்டார். இவர் அத்தியார் இந்துக் கல்லூரி: நாவற்குழி மகாவித்தியாலயம், ஆகிய கல்லூரிகளில் கடமையாற்றியவரும். யாழ் ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, ஆசிரியை வாளாம்பிகை(சரஸ்) யின் அன்புக்கணவரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 7-10-85 திங்கட்கிழமை பி. ப: 4 மணியளவில் தகனக்கிரியைக்காக இலக்கம் 604, நாவலர் வீதி, அரியாலையில் இருக்கும் அன்னாரது இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்: 1115


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126